# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலைப் பீடம்

## சிறப்புக் கலைமாணிப் பரீட்சை, பகுதி III, 2018/19

**இரண்டாம் பருவம், இறுதிப் பரீட்சை**

**நேரம் : 3 மணி**

## GYG 4289 - விமான ஒளிப்பட விவரணம்

**ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்து எல்லாமாக இரண்டு (2) வினாக்களுக்கு விடை தருக.**

**விமான ஒளிப்படங்கள், கொடா படியெடுப்புத்தாள், திட்பக் காட்சிக் கருவிகள் என்பன வழங்கப்படும்.**

## பகுதி I

**(1)** இலங்கைக்குரிய மூன்று விமான ஒளிப்படங்கள் தரப்பட்டுள்ளன.

ஒளிப்பட இலக்கங்கள் : 96, 97, 98
அளவுத்திட்டம் : 1: 20,000
வருடம் : 1982

97 ஆவது விமான ஒளிப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக. பொருத்தமான குறியீடுகள், நிறங்களைப் பயன்படுத்தி கொடா படியெடுப்புத் தாளில் பின்வருவனவற்றினைக் குறித்துக் காட்டுக.

(i) இராவணா தொடர்ச்சி மற்றும் ஆரங்க ஏரி.
(ii) பட்டிப்பொல-ஒகியா வீதி மற்றும் ஹோட்டன் சமவெளி டியாகம வீதி.
(iii) தொட்டுப்பொல திரிகோண கணித நிலையம் மற்றும் தொட்டுப்பொல பாறைத்தொடர்.
(iv) பெலிகுல் ஓயா மற்றும் அக்ரா ஓயா.
(v) ஸ்ரோபிலாந்தஸ் பற்றைக் காடுகளினால் மூடப்பட்டுள்ள இரண்டு பகுதிகள்.
(vi) உயரம் குறைந்த மரங்களைக் கொண்ட ஈரப் பத்தனா புல் நிலங்கள்.
(vii) பெனிசித்தும் (Pennisitum) புற்களினால் மூடப்பட்டுள்ள இரண்டு பகுதிகள்.
(viii) 80% மரங்களினால் மூடப்பட்டுள்ள மொந்தானைக் காடு.
(ix) 10% மரங்களினால் மூடப்பட்டுள்ள மொந்தானைக் காடு.
(x) மிகச்சிறிய மூங்கில் மரங்களினால் மூடப்பட்டுள்ள இரண்டு பகுதிகள்.

(20 புள்ளிகள்)

**(2)** இலங்கைக்குரிய மூன்று விமான ஒளிப்படங்கள் தரப்பட்டுள்ளன.

ஒளிப்பட இலக்கம் : 55, 56, 57
அளவுத்திட்டம் : 1: 20,000
வருடம் : 1982

56 ஆவது இலக்க விமான ஒளிப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக. பொருத்தமான குறியீடுகள், நிறங்களைப் பயன்படுத்தி கொடா படியெடுப்புத் தாளில் பின்வருவனவற்றினைக் குறித்துக் காட்டுக.

(i) கொஸ்குலான ஆறு மற்றும் கொஸ்குலான உடைவு வலயம்.

(ii) தேயிலைப் பயிர்ச்செய்கையைக் கொண்டுள்ள இரண்டு உயர் நிலங்கள்.

(iii) பழைய பைனஸ் பெருந்தோட்டங்கள் மற்றும் புதிய பைனஸ் பெருந்தோட்டங்கள்.

(iv) இரண்டு படர்செடி நிலங்கள் (Fernlands).

(v) நெற்செய்கை மேற்கொள்ளப்படும் இரண்டு பகுதிகள்.

(vi) நான்கு படையடுக்குகளைக் கொண்ட இரண்டு காட்டுப் பகுதிகள்.

(vii) ஒரு படையடுக்கினைக் கொண்ட இரண்டு காட்டுப் பகுதிகள்.

(viii) தெரிவு செய்து மரங்கள் வெட்டப்பட்ட இரண்டு பகுதிகள்.

(ix) உயரமான மரங்களைக் கொண்ட ஒரு காடு.

(x) ஒரு கொத்தணிக் குடியிருப்பு.

(20 புள்ளிகள்)

## பகுதி II

**(3)** (i) 1952 இல் சர்வதேச புவியியல் சங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிலப்பயன்பாடு மற்றும் நிலப்போர்வை குறிவிளக்கத்தின் (Legend) பிரதான கூறுகள் யாவை?

(08 புள்ளிகள்)

(ii) கடந்த நாற்பது வருடங்களாக, வினா 3 (i) இல் தரப்பட்டுள்ள பிரதான கூறுகளில், சர்வதேச சூழலியல் சமவாயங்களினால் முன்னெடுக்கப்பட்ட திருத்தங்களைச் சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

**(4)** (i) 1988 இல் நெதர்லாந்திலுள்ள சர்வதேச பயிற்சி மையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட "நிலப்போர்வைப் பாகுபாட்டின்" (Land cover Classification) பிரதான மற்றும் உப கூறுகளை விளக்குக.

(8 புள்ளிகள்)

(ii) வினா 4 (i) இல் குறிப்பிடப்பட்ட பிரதான மற்றும் உப கூறுகளைப் பயன்படுத்தி இலங்கையின் தாவரப்போர்வை வகைகளைப் பாகுபடுத்தும் போது எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினைகளை உதாரணங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

xxxx